(Through Video Conference)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.கேசவன் | Father/Husband Name : சொக்கலிங்கம் |
| Age : 56 | Village : அலங்காநல்லூர் |
| Taluk : | Calling : சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 Jul 2026 12:55
(Accused produced through video conference)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மதுரை மாவட்டம் பாலமேடு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு விருதுநகர் மாவட்டம் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 14.07.2024ம் தேதி மாலை 19.15 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது சாத்தூர் நகர், வீரபாண்டியபுரம் காலனியை சேர்ந்த ஜெயகுமார் மனைவி திருமதி.ஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த 14.07.2024ம் தேதி இரவு 01.40 மணிக்கு தனது வீட்டு முன்பு தூங்கிக்கொண்டிருந்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் வாதியின் தாலி கயிற்றை அத்து சென்றுவிட்டதாகவும், தங்க குண்டு, தங்க குழாயை மீட்டுத்தருமாறு கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைகேற்ப சாத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண் 223/2024 பிரிவு 309(4) BNS ஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்காக சாத்தூர் நகர் வட்டக்காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. புகார் கொடுக்க ஈஸ்வரி யாருடன் காவல் நிலையத்திற்கு வந்தார் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. புகார் மனுவை யார் எங்கு வைத்து எழுதினார் என்பது பற்றி நான் விசாரித்தேனா என்றால் அதை நான் விசாரிக்கவில்லை. புகார் கொடுத்த நாளில் காலை முதல் மாலை வரை நான் தான் காவல் நிலைய பணியில் இருந்தேனா என்றால் பணியில் தான் இருந்தேன். இந்த வழக்கு புகார் மனு 17 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என்னிடம் புகார் மனு கொடுத்த உடனே நான் வழக்கு பதிவு செய்தேன். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் பற்றி விசாரித்தேனா என்றால் அவருடைய உறவினர்களிடம் கேட்டுவிட்டு வந்து புகார் கொடுப்பதாக கூறினார். இந்த விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் இல்லை.

5. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

16 Jul 2026 13:05

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.07.16 14:34:17 +0530

Judicial Magistrate 2, Sattur